

இலங்கை புகையிரத திணைக்களம்

செயற்பாட்டு அறிக்கை
2019

உள்ளடக்கம்

தொகுதி 01 ..... **1**

1.1 அறிமுகம் 1

1.2 குறிக்கோள் 3

1.3 பிரதான செயல்பாடுகள் 3

1.4 நிர்வாக கட்டமைப்பு 4

1.5 இலங்கை புகையிரத திணைக்களத்தின் உப திணைக்களங்கள், பிரிவுகள், அலகுகள் மற்றும் பாதை வலையமைப்பு 6

1.6 திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்கள் ∴ நிதி 7

1.7 வெளிநாட்டு உதவித் திட்டங்கள் பற்றிய தகவல்கள் 8

தொகுதி 02 ..... **9**

2.1 இலங்கை புகையிரத திணைக்களத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்பார்ப்பு 9

2.2 புகையிரத குழுமம் 13

2.3 பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து 14

2.4 சரக்கு வருமானம் மற்றும் போக்குவரத்து செய்யப்பட்ட சரக்குகளின் அளவு 15

2.5 இயக்க குறியீடு 16

2.6 முழு புகையிரத பயணம் 16

2.7 எரிபொருள் பயன்பாடு 17

2.8 நிரந்தர பாதை அமைப்புமுறை மற்றும் புதிய பாதை அமைத்தல் 17

2.9 சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு கட்டமைப்பு 18

2.10 பயணிகள் வசதி மற்றும் வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் 20

2.11 இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பட பயிற்சி நிறுவனம் 20

2.12 புகையிரத பாதுகாப்பு சேவை 21

தொகுதி 03 ..... **23**

3.1 நிதி வினைத்திறன் 23

3.2 நிதி நிலைமை பற்றிய அறிக்கை 25

3.3 நிதி வருகை அறிக்கை 26

3.4 நிதி அறிக்கை குறிப்பு 28

3.5 வருவாய் வசூலிக்கும் செயல்திறன் 28

3.6 ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்திக்கொள்வதன் வினைத்திறன் 28

3.7 நி.ச. 208 இன் படி வேறு அமைச்சுகள் / திணைக்களங்களின் பிரதிநிதியாக இந்த திணைக்களத்துக்கு / மாவட்ட செயலகத்துக்கு / மாகாண சபைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி 28

3.8 நிதி சாராத சொத்து அறிக்கைசெய்தலின் செயல்திறன்..... 29
3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை..... 29
தொகுதி 04 29
4.1 நிறுவனத்தின் செயல்திறன் குறிகாட்டிகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்) .. 29
தொகுதி 05.....30
5.1 அடையாளம் காணப்பட்ட சம்பந்தப்பட்ட நிலையான வளர்ச்சி நோக்கங்கள்..... 30
5.2 நிலையான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றும் போதான வெற்றிகள் மற்றும் சவால்கள்..... 30
தொகுதி 06 32
6.1 ஊழியர்கள் எண்ணிக்கை முகாமைத்துவம்..... 32
6.2 நிறுவனத்தின் செயல்திறனை, மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மேலதிகம் எவ்வாறு பாதிக்கிறது?..... 32
தொகுதி 07 – பண இணக்க நிலைமை.....33

தொகுதி 01

1.1 அறிமுகம்

பிரதான போக்குவரத்து வழங்குனராக, இலங்கை புகையிரத சேவை 2019 ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்து, சேவைகளை தொடர்ந்து நடத்திவந்ததோடு பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டு, சுற்றுச்சூழலுக்கு சாதகமான சிக்கனமான போக்குவரத்து முறையாக அதன் சேவைகளை திறம்பட வழங்கியுள்ளது.

இலங்கை புகையிரத திணைக்களம் அரசின் பிரதான போக்குவரத்து திணைக்களமாகும். இது போக்குவரத்து மற்றும் முகாமைத்துவ அமைச்சின் கீழ் செயல்படுகிறது. இது திணைக்களத்தின் புகையிரத கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ள விதிமுறைகளுக்கு கீழ்பட்டு செயற்படுகின்றது. புகையிரத பொது முகாமையாளர் திணைக்களத்தின் பிரதானமானவராக செயற்படுவார். இலங்கை புகையிரத திணைக்களத்தின் 14 பிரிவுகள் மற்றும் அலகுகளின் கீழ் நிர்வாக நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள அதேசமயம், குறித்த துணைத் திணைக்களத்தின், பிரிவின், அலகின் தலைவரால் ஒப்படைக்கப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நாட்டின் 25 மாவட்டங்களில், 21 மாவட்டங்களை உள்ளடக்கியவாறு, மொத்தமாக 1,479.51 கிலோமீட்டர் தூரம் கொண்ட, எல்லாமாக 418 புகையிரத நிலையங்களுடன், பயணிகள் மற்றும் சரக்கப் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படுகின்றது. தனது பிரதான குறிக்கோளான பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்திற்கு பாதுகாப்பான, நம்பகமான, சரியான நேரத்தில் பயணிக்கின்ற, செலவுகுறைந்த மற்றும் செயற்தினுள்ள புகையிரத சேவையை வழங்குவதும், சுற்றுச்சூழலுக்கு சாதகமான சிக்கனமான போக்குவரத்து முறையாக, பணிகளை மிகவும் திறம்பட பூர்த்திசெய்வதற்கும் உயர்ந்த அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. 2019 ஆம் ஆண்டிலும், பல்வேறு தடைகள் மற்றும் சவால்களையும் மீறி தனது சேவையைத் தொடர முடிந்துள்ளது.

ஈஸ்டர் தாக்குதலால் சுமார் இரண்டு மாதங்களுக்கு புகையிரத போக்குவரத்து சேவைகள் சீர்குலைந்திருந்ததோடு, நான்கு சந்தர்ப்பங்களில் நடந்த புகையிரத வேலைநிறுத்தங்கள் காரணமாகவும் பயணிகள் போக்குவரத்து மற்றும் புகையிரத வருவாய் குறைந்திருந்தமை, இந்த ஆண்டு புகையிரத திணைக்களம் எதிர்கொண்ட முக்கிய பின்னடைவுகளாகும்.

இத்தகைய பல்வேறு தடைகள் இருந்தபோதிலும், பயணிகளுக்கு சுருசுருப்பான மற்றும் வசதியான ரயில் சேவையை வழங்க பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சீனாவிலும் இந்தியாவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன ரயில்களை நீண்ட தூர சேவைகளில் ஈடுபடுத்துதல், புதிய ரயில்களை அறிமுகப்படுத்துதல் போன்றவை மூலம், இலங்கை புகையிரத திணைக்களம் பொதுமக்களின் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்ய விடாமுயற்சியுடன் செயல்படுகின்றது.

நோக்கு

தெற்காசியாவில் மிகவும் வினைத்திறன் மிக்க புகையிரத போக்குவரத்து வழங்குனாரக ஆகுதல்

பணி

பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்துக்கு பாதுகாப்பான, நம்பகமான, சரியான நேரத்தில் பயணிக்கின்ற சிக்கனமான மற்றும் வினைத்திறன் மிக்க புகையிரத போக்குவரத்து சேவையை வழங்குதல்


1.2 குறிக்கோள்

- புகையிரத பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து துறையில் பங்களிப்பை மேம்படுத்துதல்
- புகையிரத இயக்கங்களில் பாதுகாப்பை உறுதி செய்தல்
- பயணிகள் புகையிரத சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல்
- முகாமைத்துவ செயல்திறனை மேம்படுத்துதல்
- புகையிரத வருமானத்தை அதிகரித்தல்
- மனித வளத்தை அபிவிருத்தி செய்தல்
- புகையிரத உள்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல்

1.3 பிரதான செயல்பாடுகள்

- பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளை செயல்படுத்துதல்
- சரக்கு போக்குவரத்தை மேற்கொள்ளல்
- விசேட பயணிகள் புகையிரத சேவைகளை இயக்குதல்

1.4 நிர்வாக கட்டமைப்பு



Level 1 **G.M.R** – General Manager railway

Level 2 **AGM(A)** – Addl. General Manager(Admin) , **AGM(M)** - Addl. General Manager(Mechanical), **A.G.M. (M)** - Addl. General Manager(Infrastructure), **A.G.M. (O)**- Addl. General Manager(Operation), **C.F.O** – Chief Finance officer ,

Level 3 **DGM**-Deputy General Manager (Admin) , **DGM(T)** - Deputy General Manager (Training & HR) , **CEM** – Chief Engineer (Motive Power), **CME**- Chief Mechanical Engineer, **CE(W)** Chief Engineer (Way & works), **CSTE**- Chief Engineer (Signal & Telecommunication), , **DGM(C)** - Deputy General Manager (Commercial) , **DGMT**- Deputy General Manager (Transport) , **CIA**- Chief Internal Auditor , **CA**- Chief Accountant , SRP- Superintendent(RP) , **DGMP** - Deputy General Manager (Procurement) , **D P** – Director (Planning)

Level 4 **D(A)**-Director (Admin) , **DCET** - Deputy Chief Engineer (Training & HRB), **DEMO** - Deputy Chief Engineer (Motive Power), **DEM**- Deputy Chief Engineer (Mechanical), **DEME** - Deputy Chief Engineer (Electrical) , **DEW** - Deputy Chief Engineer (Way & Works) , **DEBR** - Deputy Chief Engineer (Way & Bridges), **DEBU** - Deputy Chief Engineer (Property Development & Building) , **DES** - Deputy Chief Engineer (Signal & Telecommunication), **SC** – Superintendent Commercial , **ST** – Superintendent Transportation , **DEC (P&P)** - Deputy Chief Engineer (Project & Plan)

Level 5 **SEM** – Superintendent Engineer (Motive Power), **SEME** - Superintendent Engineer (Mechanical), **SEW** - Superintendent Engineer (Way & works), **SS** – Surveyor Superintendent , **SES** - Superintendent Engineer (Signal & Telecommunication), **SEP** - Superintendent Engineer (Planning Project) , **MAR** – Deputy Superintendent (Sales & Marketing) , **DIT** - Deputy Director (Information Technology) , **DSRP** - Deputy Superintendent (R.P) , **SP** – Superintendent (Procurement) , **SE (P&P)** - Superintendent Engineer (Project & Plan)

Level 6 **ADA** – Assistant Director (Admin) / Deputy Director (Admin), **LGO** – Legal Officer , **ET** – Engineer (Training & HRB) , **EM** – Engineer (Motive Power), **ATM** – Asst. Transportation Superintendent (Mechanical) , **ATE** - Asst. Transportation Superintendent (Energy Conservation) , **EM** – Engineer (Mechanical), **EE** – Engineer (Electrical) , **CM** – Chemist & Methodologist , **EW** – Engineer (Way & Works) , **S** – Surveyor , **ES** – Engineer (Signaling & Telecommunication) , **EP** – Engineer (Planning & Project) , **AC** – Asst. Director / Deputy Director (Cost) , **AST** – Asst. Superintendent (Transportation / Commercial) , **AC** – Accountant , **ADE** – Asst. Director (Information Technology) , **ASRP**-Asst. Superintendent (R.P), **ASP** – Asst. Superintendent (Procurement), **ADP** – Asst. Director (Planning) , **E (P&P)** - Engineer (Project & Plan)

1.5 இலங்கை புகையிரத திணைக்களத்தின் உப திணைக்களங்கள், பிரிவுகள், அலகுகள் மற்றும் பாதை வலையமைப்பு

உப திணைக்களங்கள், பிரிவுகள், அலகுகள்

#	உப திணைக்களங்கள் / அலகுகள்	உப திணைக்களங்கள் / அலகுகள் பொறுப்பாளர்கள்
01	புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்	
02	தலைமை இயந்திர பொறியியளாளர் உப திணைக்களம்	தலைமை பொறியியளாளர் (இயந்திரம்)
03	தலைமை பொறியியளாளர் (பாதை / வேலைத்தளம்) உப திணைக்களம்	தலைமை பொறியியளாளர் (பாதை / வேலைத்தளம்)
04	தலைமை பொறியியளாளர் (ஓட்டுனர்) உப திணைக்களம்	தலைமை பொறியியளாளர் (ஓட்டுனர்)
05	தலைமை பொறியியளாளர் (சமிக்ஞை மற்றும் தொலைத் தொடர்பு) உப திணைக்களம்	தலைமை பொறியியளாளர் (சமிக்ஞை மற்றும் தொலைத் தொடர்பு)
06	கணக்காளர் உப திணைக்களம்	தலைமை நிதி அதிகாரி
07	வணிகம் உப திணைக்களம்	வணிக அதிகாரி
08	புகையிரத களஞ்சியம் உப திணைக்களம்	களஞ்சிய அதிகாரி
09	போக்குவரத்து உப திணைக்களம்	போக்குவரத்து அதிகாரி
10	இலங்கை புகையிரத பாதுகாப்பு சேவை	பாதுகாப்பு அதிகாரி
11	இலங்கை ஜெர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்	உப பொது முகாமையாளர் பயிற்சி மற்றும் மனிதவளம்
12	தலைமை செலவு அதிகாரி அலுவலகம்	தலைமை செலவு அதிகாரி
13	திட்டமிடல் பிரிவு	ஆணையாளர் (திட்டமிடல்)
14	தரவு ஒழுங்கமைப்பு அலகு முகாமையாளர் தரவு ஒழுங்கமைப்பு	

அட்டவணை இல. 01

புகையிரத பாதை வலையமைப்பு

	பாதை	தூரம் KM	புகையிரத நிலையங்களின் எண்ணிக்கை	உப புகையிரத நிலையங்களின் எண்ணிக்கை	புகையிரத தரிப்பிடம்
1	கரையோர பாதை (கொழும்பு கோட்டை முதல் பெலியத்த வரை)	186	41	33	0
2	பிரதான பாதை (கொழும்பு கோட்டை முதல் பதுளை வரை)	292.38	45	33	26
3	மாத்தளை பாதை (பேராதனையில் இருந்து மாத்தளை வரை)	33.75	06	06	12
4	புத்தளம் பாதை (றாகமையில் இருந்து புத்தளம் வரை)	119.57	19	25	0
5	புத்தளம் அருவக்காலு பாதை	37.00	1		
6	களனி வெலி பாதை (மருதானையில் இருந்து அவிசாவெல்ல வரை)	59.27	11	19	7
7	துறைமுக பாதை	7.00	1	-	-
8	கொலன்னாவ பாதை	3.18	1	-	-
9	வடக்கு பாதை (பொல்கஹவலையில் இருந்து காங்கேசன்துறை வரை)	339.47	31	26	17
10	தலைமன்னார் பாதை (மதவாச்சியில் இருந்து தலைமன்னார் வரை)	106.06	07	04	0
11	மிஹின்தல பாதை	13.50	01	0	2
12	மட்டக்களப்பு பாதை (மஹோவில் இருந்து மட்டக்களப்பு வரை)	211.11	14	17	05
13	திருகோணமலை பாதை (கல்லோயா சந்தியிலிருந்து திருகோணமலை வரை)	70.23	04	02	02
	மொத்தம்	**1.479.51**	**182**	**165**	**71**

அட்டவணை இல. 2

1.6 திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்கள் / நிதி

இலங்கை புகையிரத திணைக்களத்தின் கீழ் வேறு நிறுவனங்களோ நிதியோ இல்லை.

1.7 வெளிநாட்டு உதவித் திட்டங்கள் பற்றிய தகவல்கள்

#	திட்டத்தின் பெயர்	திட்டத்தின் மதிப்பீட்டு செலவு அமெ. டொலர் மி.	திட்டத்தின் கால எல்லை	விபரங்கள்
1	புகையிரத பவர்செட் தொகுதி கொள்முதல் (இந்திய கடன் உதவி)	58.04	2017.12.28 219.10.28 (22 மாதம்)	பூர்த்தியடைந்துள்ளது
2	10 புகையிரத இயந்திரங்கள் கொள்முதல் (இந்திய கடன் உதவி)	42.50	2018.05.14 2020.05.14 (24 மாதம்)	08 இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.
3	160 பயணிகள் பெட்டிகளை வாங்குதல் (இந்திய கடன் உதவி)	86.00	2018.09.07 2020.12.07 (27 மாதம்)	2020.12ஆம் மாதத்தில் 80 பெட்டிகள் இலங்கைக்கு வரவுள்ளன
4	30 எண்ணெய் தாங்கி வண்டிகளை வாங்குதல் (இந்திய கடன் உதவி)	2.57	2018.01.30 219.07.30 (18 மாதம்)	பூர்த்தியடைந்துள்ளது
5	20 கொள்கலன் வண்டிகள் வாங்குதல் (இந்திய கடன் உதவி)	1.69		
6	12 புகையிரத இயந்திரங்கள் வாங்குதல் (USD)	48.67	-	திட்டம் செயல் படுத்தப்படுகின்றது
7	கண்டி புகையிரத வழிக்காக 09 பவர் செட்களை வாங்குதல் (சீனா)	93.86	2018 செப்... 2020 மே... (20 மாதங்கள்)	5 பவர்செட் அமைப்புகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.
8	200 பாதுகாப்பான புகையிரத பாதை அமைப்புகளை நிறுவுதல்	6.47	2016.10.26 2019.01.27	பூர்த்தியடைந்துள்ளது
9	200 பாதுகாப்பான புகையிரத பாதை அமைப்புகளை நிறுவுதல்	ரூ. 2,745.02 மி.	2017.05.17 2020.09.17	140 பெட்டிகள் திருத்தப்பட்டுள்ளன
10	பொல்கஹவெல குருணாகல் இரட்டை புகையிரத பாதை அமைத்தல் (21.45 km)	52.00	2 வருடம்	திட்டம் செயல் படுத்தப்படுகின்றது
11	மாஹோ ஓமந்தை புகையிரத பாதையை திருத்துதல் (129.77 km)	91.268	3 வருடம்	திட்டம் செயல் படுத்தப்படுகின்றது

அட்டவணை இல. 03

தொகுதி 02

இலங்கை புகையிரத திணைக்களத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்பார்ப்பு...

புகையிரத போக்குவரத்தானது மலிவான மற்றும் சுற்றுச்சூழலுக்கு சாதகமான போக்குவரத்து முறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து சேவைகளுக்கு பங்களிப்பு செய்கின்ற பிரதான போக்குவரத்து பங்காளியாக இலங்கை புகையிரத சேவையானது போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. தற்போதைய பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக அதிக விருப்புடன் செயற்படுகின்ற இலங்கை புகையிரத சேவை, அலுவலக சேவை, நீண்ட தூர சேவைகள், நகரங்களுக்கு இடையிலான சேவைகள், சிறப்பு சுற்றுலா மற்றும் மத நடவடிக்கைகளுக்காக செயற்படும் விசேட புகையிரதை சேவைகளை முன்னெடுத்து வருகின்றது. இலங்கை பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேவைத் துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்து, பல்வேறு சவால்கள் மற்றும் சிக்கல்கள் இருந்தபோதிலும், வினைத்திறனுடனான புகையிரத சேவையை வழங்குவதற்கு தொடர்ந்து முயற்சித்து வருகின்றது.

தினசரி சுமார் 411 அளவிலான புகையிரதங்கள் அதன் மூலம் கிட்டத்தட்ட 400,000 பயணிகளையும் போக்குவரத்து செய்யும் அதே வேளை, 23 சரக்கு மற்றும் எண்ணெய் போக்குவரத்தையும் மேற்கொள்கின்றது. பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து சேவையில் தரமான வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் 10 புகையிரத இயந்திரங்களும், 06 பவர்செட் அமைப்புகளும், 160 பயணிகள் பெட்டிகளும், 30 எரிபொருள் தாங்கிகள் மற்றும் 20 கொள்கலன் வண்டிகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட கொள்முதலுக்கு ஏற்ப, கண்டி புகையிரத பாதை பயணத்தை மேம்படுத்த 12 புகையிரத இயந்திரங்களும் 09 பவர் செட் அமைப்புகளும் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்ட 200 பயணிகள் பெட்டிகளை திருத்துதல் மற்றும் 200 பாதுகாப்பு புகையிரத கடவை அமைப்புகளை நிறுவுதல் போன்றவை புகையிரத சேவையில் முன்னெடுக்கப்பட்ட பிரதான புகையிரத அபிவிருத்தி திட்டங்களாகும். மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன், கொழும்பு புறநகர் புகையிரத சேவையை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறு பற்றிய ஆய்வை மேற்கொண்டு, இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதோடு புகையிரத துறையின் அபிவிருத்திக்கான பிரதான திட்டமும் (**Railway Master Plan**) ஆசிய அபிவிருத்தி நிதி உதவியின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் பயணிகள் மற்றும் சரக்கு ரயில் போக்குவரத்தின் தரத்தை இன்னும் மேம்படுத்துவதற்காக, மாகோ முதல் ஓமந்தை வரை புகையிரத பாதை திருத்த திட்டத்தை தொடங்குவது, பொல்கஹவலையில் இருந்து குருணாகல் வரை இரட்டை புகையிரத பாதை கட்டுமான திட்டத்தின் ஆரம்ப பணிகளைத் தொடங்குவது, மாத்தறை முதல் பெலியத்த வரை புகையிரத பாதையை அமைத்து பயணத்தை முன்னெடுப்பது போன்றவை புகையிரத மேம்பாட்டிற்காக 2019 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட பிரதான திட்டங்கள் ஆகும்.

மேலும் கடலோர பாதையில் தெற்கு பயாகலவில் இருந்து அளுத்கம வரை இரட்டை புகையிரத பாதையின் பூர்வாங்கப் பணிகளைத் தொடங்குதல், மற்றும் நீர்கொழும்பு புகையிரத பாதையில் காட்டுநாயக்கவில் இருந்து இரட்டை புகையிரதப் பாதையை அமைப்பது செயற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கும் மேலாக, இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ஆறு பவர்செட் அமைப்புகள் இறக்குமதி செய்யப்பட்டு சேவைக்கு அனுப்பப்பட்டதுடன், 30 எண்ணெய் தாங்கிகள் மற்றும் 20 கொள்கலன் வண்டிகளும் இறக்குமதி செய்யப்பட்டன. புகையிரத

இயந்திரம் பத்தில், 8 இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. கண்டி புகையிரத பாதைக்காக சீனாவிலிருந்து கொள்வனவு செய்யப்படவிருந்த 9 பவர்செட் அமைப்புகளில் 5 இறக்குமதி செய்யப்பட்டு கண்டி பாதைக்கு இணைக்கப்பட்டுள்ளன.

மாத்தறையில் இருந்து பெலியத்த வரை புகையிரத பாதையை பயணிகளுக்காக கையளித்தமை 2019 ஆம் ஆண்டில் இலங்கை புகையிரத திணைக்களம் பெற்றுக்கொண்ட பிரதான வெற்றி ஆகும். மாத்தறையில் இருந்து பெலியத்த வரையிலான 26.09 கி.மீ. புதிய புகையிரத பாதையை மக்களுக்கு வழங்கி, மக்களுக்கு வசதியான மற்றும் வினைத்திறனுள்ள புகையிரத போக்குவரத்து சேவையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டில், இவற்றில் 128.47 மில்லியன் பயணிகள் பயணித்துள்ளதுடன் பயணிகள் கிலோமீட்டர் 7,309.56 மில்லியன் தூரத்தை பயணித்துள்ளது. அதே போல் 1.80 மில்லியன் ரொன் சரக்குகளையும் போக்குவர்த்து செய்து, ரொன் சரக்கு கிலோமீட்டர் 115.62 மில்லியன் தூரத்தையும் பயணித்து இலங்கை புகையிரதம் அதன் சேவையை தொடர்ந்து வழங்கியுள்ளது.

இந்த ஆண்டு பயணிகள் போக்குவரத்து சேவைகளை விரிவாக்கம் செய்து, புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட புகையிரத இயந்திரங்கள் மற்றும் பவர்செட் அமைப்புகளையும் பயன்படுத்தி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பல புதிய பயணிகள் புகையிரத சேவைகளை அறிமுகப்படுத்தியதுடன், இதன் மூலம் புகையிரதம் சம்பந்தமாக பயணிகளின் ஆர்வத்தை வெல்ல முடிந்தது.

- கொழும்பு கோட்டை - பதுளை (தெனுவர மெனிகே) நகர்சேர் புகையிரத சேவையின் தொடக்கம்
- கொழும்பு கோட்டை - பொலன்னறுவை (புலதிசி) நகர்சேர் புகையிரத சேவையின் தொடக்கம்
- மருதானை - பெலியத்த (தக்ஷின) நகர்சேர் புகையிரத சேவையின் தொடக்கம்
- பெலியத்தையில் இருந்து மாத்தறை வரை புதிய புகையிரத சேவையின் தொடக்கம்
- காலியில் இருந்து அளுத்கமவிற்கு புதிய புகையிரத சேவையின் தொடக்கம்
- பெலியத்தையில் இருந்து காலி வரை புதிய புகையிரத சேவையின் தொடக்கம்
- கொழும்பு கோட்டையில் இருந்து ஹோமாகம வரை புதிய புகையிரத சேவையின் தொடக்கம்
- பயணிகளின் வசதிக்காக மருதாணையில் இருந்து வாத்துவ வரையான தினசரி புகையிரதத்தை தெற்கு களுத்துறை வரை நீட்டித்தல்
- மாத்தறையில் தொடங்கி மருதாணை வரை பயணித்த புகையிரதத்தை பெலியத்தையில் இருந்து தொடக்குதல்
- மாத்தறையில் இருந்து பெலியத்த வரையிலான 26.09 கி.மீ. புதிய புகையிரத பாதையை மக்களுக்கு வழங்கி, மக்களுக்கு வசதியான மற்றும் வினைத்திறனுள்ள புகையிரத போக்குவரத்து சேவையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- கொழும்பு கோட்டையில் இருந்து வவுனியா வரை பயணித்த நகர்சேர் கடுகதி புகையிரதம் யாழ்ப்பாணம் வரை நீட்டிக்கப்பட்டது.

சரக்கு போக்குவரத்தையும் மேலும் அபிவிருத்தி செய்து, சீமெந்து மற்றும் எரிபொருள் போக்குவரத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொள்ள முடிந்தது. ப்ரிமா மாவை கொண்டு செல்வதற்காக அந்த நிறுவனத்துடன் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின்படி, குறித்த புகையிரத தொடரை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அதன்படி ப்ரிமா நிறுவனத்தின் மா போக்குவரத்து நடவடிக்கைகளை புகையிரதம் மூலம் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்கால நோக்கு

தற்போதைய போக்குவரத்துக் கொள்கையின் முக்கிய நோக்கம், போக்குவரத்து நெரிசலும் அதற்கு தீர்வுகளை வழங்குவதும் ஆகும். அதன்படி, நெடுஞ்சாலையில் பயணிக்கும் பயணிகள் மற்றும் பொருட்களை புகையிரதத்தின் பக்கம் திருப்புவதே பிரதான குறிக்கோள் ஆகும். இதில் "செழிப்பு பார்வை" கொள்கை அறிக்கையினுள் உள்ளவாறு புகையிரத உள்கட்டமைப்பை மேம்படுத்துவதும், மிகவும் வினைத்திறனுள்ள மற்றும் சிக்கனமான புகையிரத சேவையை வழங்குவதே பிரதான நோக்கம் ஆகும். அதன்படி, எதிர்கால புகையிரத திட்டங்களை இந்த நோக்கத்தின் அடிப்படையில் தயாரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இதன் கீழ், மிகவும் கவர்ச்சிகரமான மற்றும் சூழலுக்கு பாதுகாப்பான போக்குவரத்து முறையாக புகையிரத சேவையில் சாதகமான அபிவிருத்திகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

- வினைத்திறனுள்ள மற்றும் வசதியான புகையிரத சேவையை பராமரித்தல்.
- பாணந்துறை-கொழும்பு-வேயங்கொட, றாகம-கடுநாயக்க-நீர்கொழும்பு மற்றும் மருதாணை-ஹோமாகம ஆகிய புகையிரத சேவைகளுக்கு மின்சார ரயில் கட்டமைப்பை அறிமுகப்படுத்துதல் மற்றும் சாதாரண புகையிரத சேவைகளுக்கு மேலாக சொகுசு அலுவலக மற்றம் நகர்சேர் புகையிரத சேவையை அறிமுகப்படுத்துதல்.
- புகையிரத சேவையை நவீனமயமாக்க நவீன தொழில்நுட்ப வழிமுறைகள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கலை அறிமுகப்படுத்தி, புகையிரத பயணச்சீட்டுகளை வழங்குவதற்கும் ஆசனங்களை ஒதுக்கவும் இணையவழி சேவையை மற்றும் அதற்று ஏற்ப இ-டிக்கட் மற்றும் தானியங்கி நுழைவு மற்றும் வெளியேறும் முறையை அமுல்படுத்துதல்.
- பொருட்களை கொண்டு செல்வதற்கு தேவையான புகையிரத இயந்திரங்களை இறக்குமதி செய்தல் மற்றும் புகையிரத பெட்டிகளை உள்நாட்டில் உருவாக்கவும் கொழும்பு, ஹம்பன்தொட்ட, திருகோணமலை மற்றும் காங்கேசந்துறை ஆகிய துறைமுகங்களில் புகையிரதம் மூலம் பொருட்களை கொண்டு செல்வதற்கு தேவையான வசதிகளை மேம்படுத்துதல்.
- புகையிரத நிலையங்களுடன் இணைந்துள்ள பிரதான நகரங்களில் உள்ள புகையிரத காணிகளைப் பயன்படுத்தி, வணிக வளாகங்கள், நிதி சேவைகள், ஹோட்டல்கள், அலுவலகங்கள், திரையரங்குகள், பொழுதுபோக்கு மையங்கள் மற்றும் மாடிவீடுகளையும் நிர்மானத்து வணிக மையங்களாக மாற்றி, அதன் மூலம் புகையிரத சேவையின் வருவாயை அதிகரித்தல்.

எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள்

01. தெற்கு பயகலா-அலுத்கம வரை புகையிரத பாதையை இரட்டை பாதை ஆக்குதல்.
02. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் இயக்கப்பட்டு வரும் கொழும்பு புறநகர் புகையிரத சேவை அபிவிருத்தி நடவடிக்கைகள்.
03. புகையிரத எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு புகையிரத இயந்திரங்கள் மற்றும் பவர்செட் கட்டமைப்புகளை தொடர்ந்தும் கொள்வனவு செய்தல்.
04. மாஹோ-ஓமந்தை புகையிரத பாதையை திருத்தும் திட்டம்.
05. பொல்கஹவலையில் இருந்து குருணாகல் வரை இரட்டை ரயில் பாதையை அமைத்தல்.
06. குருணாகலையில் இருந்து மாஹோ வரை இரட்டை புகையிரத பாதை அமைத்தல்.

07. புத்தளம் புகையிரத பாதையை கட்டுநாயக்க முதல் கொச்சிகடை வரை இரட்டை ரயில் பாதை அமைத்தல்.
08. புதிய களனி பாலம் அமைத்தல்
09. புகையிரத சேவைக்கு பிரதான திட்டமொன்றை தயாரித்தல்.
10. இ-டிக்கெட் முறையை அறிமுகம் செய்தல்.
11. தேசிய ரீதியில் பயணிகள் பெட்டிகளின் உற்பத்தியைத் தொடங்குவது.
12. புதிய புகையிரத தொலைத்தொடர்பை அமைத்தல் அமைப்பை நிறுவுதல்.
13. பாதுகாப்பு புகையிரத கடவை அமைப்பை நிறுவுதல்.
14. பயணிகள் பெட்டிகளைத் திருத்தும் திட்டம்.

நிதி முன்னேற்றம்

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கை புகையிரத திணைக்களம் ஈட்டிய வருவாய் மற்றும் செலவினங்கள் பற்றிய தகவல்களை பின்வரும் அட்டவணைகள் காட்டுகின்றன.

வருமானம்

#	வருமான வகை	முழு வருமானம் (ரூ. மில்) 2019	
		2018	2019
01	பயணிகள்	5933.28	6386.97
02	பொதிகள் மற்றும் அஞ்சல்	209.82	125.68
03	பொருட்கள் மற்றும் கால்நடைகள்	418.23	435.02
04	மற்றவை	851.11	953.65
தொகை		**7,412.51**	**7,901.32**

அட்டவணை இல 04

செலவு

#	செலவு வகை	முழு செலவு ரூ. மில்	
		2018	2019
01	திரும்புதல் செலவு	14,380.54	15,463.53
02	மூலதன செலவு	15,248.63	20,402.25
தொகை		**29,629.17**	**35,865.78**

அட்டவணை இல 05

2.2 புகையிரத குழுமம்

இந்திய கடன் உதவியுடன் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பவர்செட் புகையிரத கலன்கள் ஆறு மற்றும் 10 இயந்திரங்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



2019 இல் இந்தியொவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட எம் 11 இயந்திரம்

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எஸ் 14 பவர்செட் புகையிரத கலன் இரண்டு கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை வரை நகர்சேர் பயணத்திற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது.



2019 இல் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எஸ் 14 வகை பவர்செட்.

மேலும், இந்திய கடன் உதவியின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 20 கொள்கலன் வெகன்கள் மற்றும் 30 எரிபொருள் தொட்டிகளும் 2019 இறுதியில் இறக்குமதி செய்யப்பட்டன. அனைத்து எரிபொருள் தொட்டிகளும் எண்ணெய் போக்குவரத்து நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன.

2019 இல் மிகவும் சிறந்த சேவையை வழங்குவதற்கு புகையிரத குழுமம் மிகவும் பிரயோசனமாக இருந்த அதே வேளை, புகையிரத சேவைக்காக ஈடுபடுத்தியுள்ள புகையிரத குழுமங்களை கீழ் காணலாம்.

சேவையில் ஈடுபடுத்தப்பட்ட புகையிரத குழுமம் 2019.

#	வகை	எண்ணிக்கை
01	புகையிரத இயந்திரம்	79
02	பவர்செட் குழுமம்	92
03	பயணிகள் பெட்டி	579
04	திறந்த கொள்கலன்கள்	1008

அட்டவணை இல 06

பயணிகள் வண்டிகள் மற்றும் புகையிரத இயந்திர பழுதுபார்புகள் மற்றும் பராமரிப்பு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதன் மூலம், 2019 ஆம் ஆண்டில் புகையிரத குழுமத்துக்கு 39,642 சிறு திருத்தங்கள் மற்றும் 1,612 பெரிய பழுதுபார்ப்புகள் நிறைவடைந்துள்ளன. மேலும், புனர்நிர்மானம் செய்யப்பட்ட 16 பயணிகள் பெட்டிகளும் சேவையில் சேர்க்கப்பட்டன.

இதற்கும் மேலாக பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்ட 200 பயணிகள் பெட்டிகள் புனர்நிர்மானம் செய்யும் திட்டத்தின் கீழ் 140 பயணிகள் பெட்டிகள் புனர்நிர்மானம் செய்யப்பட்டு 2019 இறுதிக்குள் முடிக்கப்பட்டன. அவற்றில், 108 ருமேனிய பெட்டிகளும் 32 எஸ் 8 பவர்செட் பெட்டிகளும் புனர்நிர்மானம் செய்யப்பட்டு போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.


2.3 பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து

2018 ஆம் ஆண்டில், 137.52 மில்லியன் பயணிகள் ரயிலில் பயணித்தனர், 2019 ஆம் ஆண்டில் 128.47 மில்லியன் பயணிகள் பயணம் செய்தனர். இது 2018 உடன் ஒப்பிடும்போது குறைவதைக் காட்டுகிறது. ஈஸ்டர் தாக்குதல்கள் மற்றும் நடந்துகொண்டிருக்கும் ரயில் தாக்குதல்கள் ஆகியவை பயணிகளின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணிகளாக இருந்தன. இதற்கு முக்கிய காரணம், அக்டோபர் 1, 2018 முதல் ரயில் கட்டணம் அதிகரித்தது.


பயணித்த பயணிகளின் எண்ணிக்கை மற்றும் பயணிகள் வருமானம்

வருடம்	பயணித்த பயணிகளின் எண்ணிக்கை (மி)	பயணிகள் வருமானம் (ரூ. மி)	பயணிகள் கி.மீ. (மி)
2018	137.52	5,933.28	7,709.50
2019	128.47	6,386.96	7,309.56

அட்டவணை இல. 07



வரைபு இல. 01




வரைபு இல. 02


2.4 சரக்கு வருமானம் மற்றும் போக்குவரத்து செய்யப்பட்ட சரக்குகளின் அளவு

வருடம்	சரக்கு வருமானம் ரூ. (மி)	சரக்கு தொகை டொன் (மி)	டொன் கிலோமீட்டர் அளவு (மி)
2018	418.22	1.83	119.78
2019	435.02	1.80	115.62

அட்டவணை இல. 8



வரைபு இல. 3



வரைபு இல. 4

2.5 இயக்க குறியீடு

இலக்கம்	வினைத்திறன் குறியீடு	2019
01	புகையிரத வருமானம் (ரூ. மி)	7,901.02
02	பயணித்த பயணிகளின் தொகை (மில்லியன்)	128.47
03	பயணிகள் கி.மீ. தொகை (மில்லியன்)	7,309.56
04	போக்குவரத்து செய்த சரக்கு டொன் அளவு (மில்லியன்)	1.80
05	சரக்கு டொன் கி.மீ. (மில்லியன்)	115.62

அட்டவணை இல. 9

2.6 முழு புகையிரத பயணம்

புகையிரத சேவை	திட்டமிட்ட புகையிரத எண்ணிக்கை.	பயணித்த புகையிரதங்களின் எண்ணிக்கை
புறநகர்	70,001	65,759
பிரதேசம்	28,090	24,803
தூர மற்றும் நகர்சேர்	22,095	20,770
ரயில் பஸ்	4,764	3,900
1. பயணிகள்	**124,950**	**115,232**
11. சரக்கு	**8,913**	**6,659**
Karaharapriya	**133,863**	**121,891**

அட்டவணை இல. 10

மேலே உள்ள அட்டவணை 10 இன் படி, 2019 ஆம் ஆண்டில் இயக்குவதற்கு திட்டமிடப்பட்ட பயணிகள் புகையிரதம் எண்ணிக்கை 133,863 ஆக இருந்ததோடு, அவற்றில் 121,891 பயணித்துள்ளன. இது 91மூ சதவீதம் ஆகும். பயணிகள் மற்றும் சரக்கு புகையிரதங்களின் பயணம் வீழ்ச்சியடைவதற்கு ஈஸ்டர் தாக்குதல்கள் மற்றும் புகையிரத வேலைநிறுத்தங்கள் நேரடியாக பாதித்தன.

2.7 எரிபொருள் பயன்பாடு

புகையிரத இயந்திரங்கள் மற்றும் பவர்செட்டுகளுக்கு பின்வருமாறு எரிபொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

விபரம்	2018	2019
டீசல் லீட்டர் மில்.	37.57	33.92
எரிபொருள் செலவு (ரூ. மில்)	3,858.08	4,315.60

அட்டவணை இல. 11

2019 இல் எரிபொருள் நுகர்வு 33.92 மில்லியன் லிட்டராக இருந்த அதே வேளை, அதற்காக 4,315.60 மில்லியன் 'ரூபா செலவேற்பட்டது. 2018 உடன் ஒப்பிடும்போது 2019 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட எரிபொருள் 3.65 மில்லியன் லிட்டர் குறைவாக இருப்பதை அடையாளம் காணமுடியும். இந்த ஆண்டு நடத்தப்பட்ட ஈஸ்டர் தாக்குதல்கள் மற்றும் வேலை நிறுத்தங்கள் காரணமாக புகையிரத போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்றதும் மற்றும் வார இறுதியில் பயண முடிவு வரை பயன்படுத்தப்பட்ட புகையிரதங்கள் மீண்டும் தரிப்பிடத்துக்கு கொண்டவரப்படாமல், வாரத்தின் தொடக்கத்தில் பயணிகளுடன் கொண்டுவரப்பட்டதும் இதற்கான காரணங்களாகும்.

எரிபொருள் நுகர்வு குறைக்கப்பட்ட போதிலும், அதற்காக செலவிடப்பட்ட தொகை 2018 உடன் ஒப்பிடும்போது 2019 ஆம் ஆண்டில் 465.52 மில்லியன் 'ரூபாயாக அதிகரித்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதே இதற்கு முக்கிய காரணியாகும்.

2.8 நிரந்தர பாதை அமைப்புமுறை மற்றும் புதிய பாதை அமைத்தல்

நிரந்தர பாதை அமைப்பின் பராமரிப்பு மற்றும் மேம்பாடு செய்வதும் தொடர்ந்தது முன்னெடுக்கப்பட்டு வந்ததோடு, அதற்காக 205,673 அடி தண்டவாளங்களும், 49,561 கொங்கிரீட் சில்பர்களும், 70,183 மர சில்பர்களும் மற்றும் 30,308 பெலஸ்ட் க்யூப்களும் பயன்படுத்தப்பட்டன.

புகையிரத பாதை பராமரிப்புக்கு பயன்படுத்திக்கொள்ளப்பட்ட பொருட்கள்

பயன்படுத்தப்பட்ட பொருட்கள்	அளவு
தண்டவாளம் அடி	205,673
மர சில்பர்	70,183
உருக்கு சில்பர்	1,047
கொங்கிரீட் சில்பர்	49,561
பெலஸ்ட் கியூப்	30,308

அட்டவணை இல. 12

புத்தளம் புகையிரத பாதையில் கட்டுநாயக்கவில் இருந்து குரண வரை இரட்டைப் புகையிரத பாதை அமைத்தலை பூர்த்தி செய்தல், மாஹோ ஓமந்தை புகையிரத பாதையின் சீர்திருத்த பணிகளைத் தொடங்குவது, பொல்கஹவலையில் இருந்து குருணாகல் வரையிலான இரட்டைப் புகையிரத பாதையின் முதற்கட்டப் பணிகள் மற்றும் கண்டி-பேராதனை-கடுகன்னாவ பாதையின்

ஆரம்பப் பணிகள், தெற்கு பயாகலவில் இருந்து அளுத்கம வரை இரட்டைப் புகையிரதப் பாதையின் முதற்கட்ட பணிகள் செயற்படுத்தப்பட்டன. இதற்க மேலாக, புகையிரத நிலைய கட்டிடங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் வருடத்துக்குள் பூர்த்தி செய்யப்பட்டன. மேலும், ஆஸ்திரிய அரசாங்கத்தின் கடன் உதவியுடன் புதிய களனி பாலத்தை கட்டுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் கிடைத்துள்ளதோடு மற்றும் அதன் ஆரம்ப பணிகள் நடந்து வருகின்றன.

நிதி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், பேராதனை, ஹட்டன், மாத்தளை, சிலாபம், அளுத்கம, அம்பலங்கொட, அஹங்கல்ல, மாத்தறை, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், கட்டுநாயக்க, கடுகன்னாவ, ரம்புக்கன, பொல்கஹாவலை, மொரட்டுவ ஆகிய புகையிரத நிலையங்களில் சுகாதார வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் ஹிக்கடுவ, உனவடுன, பென்தொட்ட, தெற்கு களுத்துறை, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள புகையிரத நிலையங்களின் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் புகையிரத நிலையங்கள் நவீனமாக்கல் ஆகியவை சுற்றுலா சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

2019 ஆம் ஆண்டில், வேக வரம்பை நீக்கி, வினைத்தினுள்ள புகையிரத சேவையை பேணுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இலக்கம்	மாவட்டம்	அகற்றப்பட்ட வேக கட்டுப்பாடு
01	மத்திய மாவட்டம்	21
02	கீழ் மாவட்டம்	11
03	மேல் மாவட்டம்	17
04	வடக்கு மாவட்டம்	38
05	கிழக்கு மாவட்டம்	53
	மொத்தம்	140

அட்டவணை இல. 13

2.9 சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு கட்டமைப்பு

பாதுகாப்பான மற்றும் வினைத்திறனுள்ள புகையிரத சேவையை பராமரிக்க, புகையிரத சமிக்ஞை கட்டமைப்பின் செயல்பாடு மிகவும் முக்கியமானது. அந்த சகல புகையிரத நிலையங்களுக்கும் அமைக்கப்பட்டுள்ள சமிக்ஞை கட்டமைப்பை முறையாக பேணி, செயற்பாட்டில் வைத்திருப்பதானது சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு துணைத் திணைக்களத்தின் பிரதான கடமையாகும். அதே நேரம், தற்போது புகையிரத பாதை கட்டமைப்பு முழுதும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள செயலில் உள்ள புகையிரத கடவை கட்டமைப்புகளின் எண்ணிக்கை 500 க்கும் மேற்பட்டதாக உள்ள அதே வேளை, அவற்றையும் முறையாக பராமரித்து சரியான செயல்பாட்டு நிலையில் பேணிவர வேண்டும்.

சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு முறைமையின் சரியான பராமரிப்பு மற்றும் நவீனமயமாக்கல், புகையிரத சேவையின் செயல்திறனை மேம்படுத்த நல்ல ஆதரவை வழங்குகிறது. 2019 ஆம் ஆண்டிலும், சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு கட்டமைப்பின் செயற்பாட்டை உயர் மட்டத்தில் பேணுவதற்காக சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு துணைத் திணைக்களம் தொடர்ச்சியான பராமரிப்பை மேற்கொண்டு வந்துள்ளது.

சமிக்ஞை முறைமையின் அன்றாட பராமரிப்புக்கு மேலதிகமாக, கீழ்வரும் வகையில் நவீனப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள 2019 ஆம் ஆண்டில் முதலிடம் கொடுப்பதன் மூலம், புகையிரத சேவையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதில் வெற்றிகாணப்பட்டுள்ளது.

பாதைகள் மற்றும் கைத்தொழில் பிரிவினால் நிர்மான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்ட சீதுவ-கட்டுநாயக்க இரட்டை புகையிரத பாதைக்காக, வினைத்திறனுள்ள உற்பத்தித்திறனுள்ளவாறு புகையிரத போக்குவரத்துக்காக சமிக்ஞை முறைமை நிறுவப்பட்டுள்ளது. இங்கு புகையிரத போக்குவரத்துக்கு இடையில், அந்த பயணத்துக்கு ஏற்படும் இடையூறுகளைக் குறைப்பதற்கான முந்தைய செயற்பாடுகளுக்க சமாந்தரமாக, குறுகிய காலத்தில் சமிக்ஞை முறைமையின் பணிகளை முடிக்க முடிந்தமை, திணைக்களம் பெற்ற மிகப்பெரிய வெற்றியாகும்.

பொல்கஹவலையில் இருந்து மாஹோ வரையான அனைத்து புகையிரத தரிப்பிடங்களையும், அதனுடன் தொடர்புடைய அனைத்து சமிக்ஞை அமைப்புகளையும் வர்ன சமிக்ஞை அமைப்புகளாக மாற்றும் திட்டத்தை துரிதப்படுத்தி, பொதுஹர மற்றும் பொல்கஹவலைக்கு இடையிலான புகையிரத பகுதியில் கீழ்வரும் பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளுக்காக, மின் எச்சரிக்கை மணிகள் மற்றும் புகையிரத கடவை எச்சரிக்கை கட்டமைப்புகளை இணைக்கும் நடவடிக்கைகளும் 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளன.

- ❖ வாகொல்ல கந்துருகும்புர பாதை
- ❖ நைலிய பஹலகம வெலமெத புகையிரத கடவை
- ❖ நைலிய புகையிரத நிலையம் அருகே உள்ள புகையிரத கடவை

மேலும் கடுநாயக்க சீதுவ இரட்டை புகையிரத பாதை சமிக்ஞை அமைப்பை வழங்குவதும் மற்றும் ஏனைய பாதைகளில் கடவை சமிக்ஞை அமைப்புகளை இணைப்பதும் திருத்துவதும் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- கட்டுநாயக்க பன்சல வீதி
- கட்டுநாயக்க புகையிரத நிலைய வீதி
- நுககஹா வீதி
- கடுநாயக்க நாயக வீதி
- லியனகேமுல்ல தேவாலய வீதி
- தலவத்தேகெதர புகையிரத கடவை
- வாத்துவ போதிராஜ மாவத
- கட்டுகுருந்த குறுக்கு வீதி
- பல்பொலவத்த புகையிரத கடவை வீதி
- சமகி மாவத்த

குறித்த புகையிரத கடவைகளுக்காக புகயிரதம் வருவதை காட்டும் வகையில் குவிவு கண்ணாடி பொருத்துவதற்கும் இந்த ஆண்டு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அலுவலக புகையிரத நெரிசலை குறைப்பதற்காக மருதாணையில் இருந்து ராகம வரை அலகுகள் அறிமுகப்படுத்தப்பட்டு புதிய அலகு சமிக்ஞை முறைமையை ஸ்தாபித்து, போக்குவரத்துக்கு வழங்குவதும் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட

200 பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளுக்காக மின் சமிக்ஞை பாதுகாப்பு அமைப்புகளை நிறுவும் திட்டத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதற்கும் மேலாக 200 புதிய சமிக்ஞை அமைப்புகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

2.10 பயணிகள் வசதி மற்றும் வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள்

- ஊனமுற்ற பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்துதல் (சக்கர நாற்காலிகள், ஊனமுற்றோர் பயணிப்பதற்கான பாதைகள், கழிப்பறை வசதி மற்றும் ஊனமுற்றோருக்கான நுழைவு பாதைகளை அமைத்தல்)
- பெலியத்தவில் இருந்து மாதறை வரை புதிய புகையிரத சேவையைத் தொடங்குவது
- காலியில் இருந்து அலுத்கமவிற்கு புதிய புகையிரத சேவையைத் தொடங்குவது
- பெலியத்தவில் இருந்து காலி வரை புதிய புகையிரத சேவையைத் தொடங்குவது
- கொழும்பு கோட்டையில் இருந்து ஹோமாகம வரை புதிய புகையிரத சேவையைத் தொடங்குவது
- பயணிகளின் வசதிக்காக மருதாணையில் இருந்து வாத்துவவிற்கான தினசரி புகையிரதத்தை களுத்துறை வரை நீட்டிப்பது
- மருதாணையில் இருந்து மாத்தறை வரையான புகையிரதத்தை பெலியத்த வரை நீட்டிப்பது
- மாத்தறையில் இருந்து தொடங்கி மருதாணை வரை பயணித்த புகையிரதத்தை பெலியத்த புகையிரத நிலையத்தில் இருந்து தொடங்குவது
- புகையிரத நிலையங்களில் ஓய்வறைகளை புதுப்பித்தல் மற்றும் அவை பயணிகளுக்கு இலகுவாக ஒதுக்கீடு செய்துகொள்வதற்கான முறைமைகளை அறிமுகம் செய்தல்.
- புதிய புகையிரத சேவைகளை அறிமுகம் செய்தல்.
- நகர்சேர் புகையிரதங்களில் பயணிக்க நுழைவுசீட்டுகளை பெற தேவையான ஏற்பாடுகளை மேம்படுத்துதல்.
- புகையிரத நிலைய வளாகத்துக்குள் சிறிய விநியோக நிலையங்கள், கடை அறைகள் மற்றும் வாகன தரிப்பிடங்கள் அமைப்பதன் மூலம் பயணிகளுக்கு கூடுதல் சேவைகளை வழங்குதல்.
- புகையிரத துறை காணிகளை குத்தகைக்கு விடுவதை தொடர்ந்தும் முன்னெடுத்தல்.

2.11 இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பட பயிற்சி நிறுவனம்

தரமான தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட ஜெர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம், 2019 ஆம் ஆண்டிலும் தனது பணியைத் தொடர்ந்தது. பயிற்சி பெறும் மாணவர்களின் நடைமுறைத் தேர்வுகளை நடத்துவதற்கான உள்கட்டமைப்பை வழங்குதல், தொழில் தேர்வுகளுக்காக வசதி செய்துகொடுத்தல், பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் பயிற்சிபெறும் வெளியார்களின் மதிப்பீடுகளை நடத்துவது மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் பணியிடப் பயிற்சியை மேற்பார்வையிடுவது போன்ற நடவடிக்கைகள் இதன் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிறுவனம் நடத்தும் பாடவிதானங்கள் முக்கியமாக பின்வருமாறு செயல்படுத்தப்படுகின்றன. தேசிய தொழில் தகுதி National Vocational Qualification நிலை உள்ளிட்ட முழுநேர பாடநெறிகள் இதன் கீழ் நடத்தப்படுகின்றன.

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் மூலம் 2019 ஆம் ஆண்டில் நடத்திய பாடநெறிகள் மற்றும் பயிற்சிபெறும் மற்றும் வெளியேறியவர்களின் எண்ணிக்கையை அட்டவணை 14 காட்டுகிறது.

இலக்கம்	பாடவிதானங்கள்	பயிற்சி பெறுவோர் எண்ணிக்கை
01	டீசல் என்ஜின் பொறியியலாளர்	26
02	தொழில்நுட்பவியலாளர்	19
03	மின்னியலாளர்	29
04	வெல்டிங் செய்பவர்	18
	மொத்தம்	92

அட்டவணை இல. 14

குறித்த நிறுவனங்களுக்காக பெறப்பட்ட தொழிற்சாலை பயிற்சிகள் பற்றிய விபரங்களை கீழ் வரும் அட்டவனையில் காணலாம்

#	நிறுவனம்	மாணவர் எண்ணிக்கை
01	EUG	03
02	பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம்	54
03	CINEC	03
04	SLIIT	01
05	தொழிற்நுட்ப கல்லூரி	03
06	இலங்கை அசஸ் தொழில்நுட்ப நிறுவனம்	06
07	NDT	08
08	கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்	01
09	UNIVOTEC	04
10	BET	08
	மொத்தம்	91

அட்டவணை 15

2.12 புகையிரத பாதுகாப்பு சேவை

2019 ஆம் ஆண்டில் பயணிகளின் பாதுகாப்பு, புகையிரத புகையிரத சொத்துக்கள் பாதுகாப்பு போன்ற முக்கிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு, புகையிரத பாதுகாப்பு சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக கீழ் வரும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

- வாரத்திற்கு சுமார் 350 புகையிரதங்கள் அளவில் பாதுகாப்பு அதிகாரிகளால் பாதுகாக்கப்படுகின்றன. மேலும், தினசரி 150 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள்.. பெண் அதிகாரிகள் சிவில் உடையில் அலுவலக புகையிரதங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

